# CULT OF SHIRADI SAI BABA IN CULTURAL DOMAIN OF JAFFNA: CULTURAL INQUIRY ON RELIGION AND WORSHIP

## யாழ்ப்பாணப் பண்பாட்டு வெளியில் சீரடி சாயி பாபா வழிபாட்டு மரபு: சமயம், வழிபாடு பற்றிய பண்பாட்டியல் விசாரணை

**Shanmugarajah Srikanthan[1] & Thakshajini Selvakumar[2]**

[1]Senior Lecturer, Department of Sociology, University of Jaffna
[2]Cultural Officer, Divisional Secretariat, Kayts, Jaffna

*srikanthan80@gmail.com*

**ABSTRACT:** *Religion and its associated worship traditions are one of the creations of human culture. Renowned anthropologist, E.B. Tylor defined religion as belief in spiritual beings. Numerous religious traditions have been originated in different periods of the world history and have being spread among the people. The South Asia is an origin center of foremost religions such as Hinduism, Buddhism, Jainism and Sikhism in the world. It could be observed in the religious history of South Asia that new religious cult are being formed through religious syncretism process during the various historical period of the region. In this context, this present study attempts to make a cultural inquiry on Shiradi Sai Baba cult which is popularizing worship tradition among people of India and Sri Lanka. The worship of Shiradi Sai Baba, which is emerging as a unique religious tradition in predominantly line with the Hindu religious tradition in Jaffna, creates a space for getting new religious experiences among the Hindu devotees. The objectives of this study is to analyse the unique features of the Shiradi Sai Baba cult and its socio-cultural importance in the Jaffna cultural domain and discuss the religious and social factors behind its dynamics. This study is based on the ethnographic method which is principal approach in the study of culture. The primary data for this study were collected through the fieldwork conducted in Shiradi Sai Baba shrines in Jaffna. Sai Mandri, one of the Shiradi Sai Baba worship center located at Navalar Road, Nallur has been selected as a sample study center for this study. A person born in an Islamic family of Shiradi village, Maharashtra State in India has been deified as a popular deity and worshiped in India and Sri Lanka. The devotees can directly involve in this worship practices by various manners, though it is associated with Hindu worship. This Shiradi Sai Baba worships lead to leave the traditional Hindu cultural manners specially the concepts of purity and impurity in ritual matters, and to a new state of worship patterns. Definitions related to the sanctity of religion in the Hindu cultural tradition have been followed very flexibly in the worship tradition of Sri Sai Baba. However, this study reveals that the worship of Shiradi Sai Baba, which is very much in tune with the Hindu cults, is making new changes in the religious beliefs and practices of the youth in Jaffna.*

**Keywords**: Cult, Shirady Sai Baba, Syncretism

### 1. ஆய்வு அறிமுகம்

மனித பண்பாட்டு உருவாக்கங்களில் ஒன்றாக சமயமும் அதுசார்ந்த வழிபாட்டு மரபுகளும் காணப்படுகின்றன. தென்னாசியப் பண்பாட்டுப் பிராந்தியம் உலகின் முதன்மையான சமயங்களின் பிறப்பிடங்களின் மையமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் அண்மைகாலமாக இந்தியாவிலும் இலங்கையிலும் மிகவும் மக்களிடையே பிரபல்யமடைந்து வருகின்ற சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபுதொடர்பான பண்பாட்டியல் விசாரணையாக இவ்வாய்வு அமைகின்றது. நீண்ட நெடிய சமயப்பட்டு பாரம்பரியமான இந்துசமய வழிபாட்டு மரபுகள் காலந்தோறும் பல்வேறு புதிய சமயப் பண்பாட்டு மரபுகளின் உருவாக்கத்திற்கும் ஒத்திசைவுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. இந்தியப் பண்பாட்டுப்

அனைத்திந்தியப் பண்பாட்டுப் பிராந்தியங்களுக்கும் பொதுவான சமய வழிபாட்டு முறையாக ஸ்ரீராமகிருஸ்ண மி'ன் மற்றும் அரபிந்தோ ஆச்சிரமம் போன்று எதிர்காலத்தில் சீரடிசாயிபாபா வழிபாடும் உழுச்சிபெறும் என்ற வையிற்றின் கருத்திற் இணங்க இன்று சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபானது அனைத்திந்திய சமயவழிபாட்டு மரபாக காணப்படுகின்றது (White, 1972). குறிப்பாக சீரடி சாயியபாபா வழிபாட்டு மரபானது இந்துசமய வழிபாட்டு முறையின் செல்வாக்கு நிறைந்த ஒன்றாக நிலவருகின்றமை பல்வேறு ஆய்வுகள் வெளிப்படத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (McLain, 2011 & Pandya, 2014). இந்துசமய வழிபாட்டு மரபின் ஒத்திசைவுடன் தனித்துவமான சமய வழிபாட்டு மரபாக எழுச்சி பெற்று வருகின்ற சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபானது மக்களின் சமய வாழ்வியலில் புதிய சமய அனுபவங்களின் மையமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் இவ்வாய்வின் பிரதான நோக்கம் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு வெளியில் சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபின் தனித்துவமான விடயங்களை அவற்றின் பின்புலமான காரணிகளையும் பண்பாட்டியல் விசாரணைக்கு உட்படுத்துவதாகும்.

## 2. ஆய்வு முறையியல்

யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வருகின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட மற்றும் கிராமிய சமய வழிபாட்டு மரபுகளுடன் இணைந்தும் தனித்துமாகவும் எழுச்சிபெற்றுவரும் சீரடி சாயி பாபா வழிபாட்டு மரபின் எழுச்சின் பின்புலமான சமூக சமய பண்பாட்டு அசைவியக்கங்களை இவ்வாய்வு குவிமையப்படுத்துகின்றது. சமய வாழ்வின் அடிப்படைகள் மக்களின் அன்றாட வாழ்வியல் முறைகளுடன் ஒன்றிணைந்து காணப்படுகின்றது. மக்களின் வாழ்வியல் முறைபற்றிய பண்பாட்டியல் விசாரணைகளில் இனவரைவியல் ஆய்வு அணுகுமுறைகள் முதன்மையானவையாகும். இந்நிலையில் இவ்வாய்வானது இனவரைவயில் ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான தரவுகள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அமைந்துள்ள சீரடி சாயிபாபா வழிபாட்டிடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. நாவலர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சீரடி சாயிபாபா வழிபாட்டு மையம் வகைமாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான களாய்வுகள் மூலம் ஆய்விற்கான பிரதான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட சீரடி சாயிபாபா வழிபாட்டு மையத்தில் மேற்கொள்ளப்பட்ட பங்குபற்றும் அவதானம், பிரதான தகவலாளியுடனான நேர்காணல் மற்றும் சீரடி சாயிபாபா கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களுகிடையே மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வுகளும் ஆய்வுக்கான பிரதான தகவல் சேகரிப்புக் கருவிகளாகும்.

## 3. முடிவுகளும் கலந்துரையாடலும்

இந்துப் பண்பாட்டு பாரம்பரியங்களைத் தனித்துவமாகக் கொண்ட யாழ்ப்பாணப் பண்பாட்டு வெளியில் அண்மைக் காலமாக எழுச்சிபெற்று வருகின்ற சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபு மக்களிடையே குறிப்பாக இளையோரிடையே ஒரு பிரபல்ய சமயப் பண்பாடாக நிலவிவருகின்றது. யாழ்ப்பாணத்தில் சிறிய இடப்பரப்பில் தனிநபர்களால் உருவாக்கப்படும் சீரடி சாயிபாபா வழிபாட்டிடங்கள் பின்னர் மக்கள் அதிகம் ஒன்று கூடும் சமய வழிபாட்டுத் தலங்களாக மாறிவருகின்றன. எளிமையான வழிபாட்டு முறைகளில் தொடங்கி பின்னர் ஆகம மரபின் வழிவந்த சமய வழிபாட்டு முறைகளை எவ்விதமான சமய சாஸ்திரக் கட்டுப்பாடுகளை முழுமையாகக் கவனத்தில் கொள்ளாது; வழிபடும் அடியவர்களின் சமய அனுபவங்களை முதன்மைப்படுத்திய வழிபாட்டு முறைகளுடன் இணைந்த வகையில் சீரடி சாயிபாபா வழிபாட்டு மையங்கள் காணப்படுகின்றன. நல்லூர், யாழ்ப்பாண நகரம், புத்தூர், பெரியவிளான், பருத்தித்துறை கரவெட்டி என யாழ்ப்பாண குடா நாட்டின் பல்வேறு இடங்களில் சீரடி சாயிபாபா வழிபாட்டு மையங்கள் உருவாகி மக்கயிடையே பிரல்யமடைந்துள்ளன.

ஆய்வின் நோக்கம் கருதி தெரிவுசெய்யப்பட்ட நல்லூரில் அமைந்துள்ள சீரடி சாயிபாபா வழிபாட்டு இடமும் இங்கு இடம்பெறும் வழிபாட்டு மரபுகளும் தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் வழியாக நோக்கும் போது பாரம்பரியமான யாழ்ப்பாண இந்துப் பண்பாட்டு மரபில் சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபானது பின்வரும் அடிப்படையில் தனித்துவமிக்க ஒரு சமய வழிபாட்டு மரபாக எழுச்சிபெற்று வருகின்றமையினை அறியலாம்.

### 3.1. சீரடி சாயிபாபா வழிபாடு பற்றிய சுருக்க அறிமுகம்

இஸ்லாமிய ஞானியான சீரடி சாயிபாபா (1838 - 1918) இந்தியாவில் மகாராஸ்டிர மாநிலத்தில் ஒரு சிறிய கிராமமான சீரடியில் பிறந்தார் (Vicziany, 2016). இஸ்லாமியனாகவும் இந்துவாககவும் ஒத்திசைவுபெற்ற நபராக மக்களால் இவர் அறியப்படுகின்றார் (Loar, 2018). இவருடைய வாழும் காலத்தில் இவரைச் சார்ந்து இந்து, இஸ்லாமிய மற்றும் ஏனைய மதத்தினைச் சேர்ந்த சிறிய பக்தர்கள் குழு காணப்பட்டது. அவர்கள் இவரை சற்குரு மற்றும் அறிவொளிக்குரிய ஆசானாகவே நோக்கினர்.

ஆனால் 1972 ஆரம்பத்தில் இந்தியாவின் மேற்கு மற்றும் தென்மத்திய பகுதிகளில் ஒரு துடிப்பான சமய வழிபாட்டு இயக்கமாக எழுச்சியடையத் தொடங்கியது (McLain, 2011). இளமைக் காலத்தில் இவருக்கு ஏற்பட்ட சமய அனுபவங்கள் பிற்பட்ட காலத்தில் இவரை சமய ஞானம் உடையவராக மக்களால் அறியப்படக் காரணமாயின. இவ்வகையாக இவரிடம் காணப்பட்ட தனித்துவமான சமய அனுபவங்கள் பிற்பட்ட காலத்தில் இவரை ஒரு ஞானியாக மக்களால் போற்றப்படுவதற்கு வழிவகை செய்தது. இவரால் மேற்கொள்ளப்பட்ட அற்புதச் செயற்பாடுகள் மக்களிடையே இவர் தொடர்பான சமயம் சார் கருத்துநிலையினை மக்களிடையே உருவாக்கின. அதன் வழியாக பிற்பட்ட காலத்தில் பாபா எனவும், 1918 ஆண்டு அவருடைய சமாதி நிலைக்கு பின்னர் சீரடி சாயிபாபா ஆகவும் அறியப்பட்டார். இந்தியாவில் மட்டுமன்றி இன்று இலங்கை மற்றும் உலக நாடுகளில் எண்ணற்ற மக்கள் இவருடைய சமய வழிபாட்டினை பின்பற்றும் பக்தர்களாக உள்ளனர். இந்தியாவில் மகாராஸ்டிரா மாநிலத்தில் சீரடியில் இவருடைய சமாதி வழிபாட்டிடமும் ஏனைய இடங்களில் வட இந்திய கட்டடிக்கலை மரபினை ஒத்த வழிபாட்டிடங்களும் உருவாக்கப்பட்டு மகாராஸ்டிரா மாநிலத்தில் உள்ள சீரடி சாயிபாபா வழிபாட்டு இடத்தில் இடம்பெறுகின்ற வழிபாட்டு மரபினை ஒத்தும் பிராந்திய சமய வழிபாட்டு மரபுகளோடு இணைந்த வகையிலும் வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

### 3.2. யாழ்ப்பாண சீரடி சாயி பாபா ஆலயம்

ஆய்வுக்காக வகைமாதிரியாக தெரிவுசெய்யப்பட்ட சீரடி சாயிபாபா வழிபாட்டுடிடம் சீரடிக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத பக்தர்களின் குறைகளைத் தீர்க்கும் முகமாக 2007ம் ஆண்டு 314 நாவலர் வீதி, மடத்தார் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒரு வீட்டின் சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு 2012ம் ஆண்டு மூலஸ்தான தூபியுடன் மகா கும்பாபி'ேகமும் செய்யப்பட்டு ஈழத்து சீரடி சாயி பாபா மந்தீர் என அழைக்கப்பட்டு வருகின்றது. ஆலய அறங்காவலர், தலைவர் மற்றும் ஆலய ''சகரான திரு. பா. ராகவன் (35 வயது) குறிப்பிடும் போது

> 2007 ஆண்டு வீட்டின் முத்தத்தில் என்னால் உருவாக்கப்பட்ட இந்த ஆலயம் 2012 ஆண்டு சிறியஅளவிலான கட்டிடங்களுடன் கும்பாபிசேகம் செய்யப்பட்டு பின்னர் 2017 ஆண்டு மிகப்பெரிய கருவறையும் பல்வேறு பிரகார தெய்வங்களுடனும் மகாகும்பாபிசேகம் செய்யபட்டது

என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

### 3.3. யாழ்ப்பாண சீரடி சாயி பாபா ஆலயம் வழிபாட்டு முறைகள்

ஈழத்து சீரடி சாயி மந்தீரியில் இந்து ஆலயங்களில் இடம்பெறும் வழிபாடுகளைப் ஒத்தவகையில் தினமும் 3 வேளை ''சை இடம் பெறுகின்றது. அவற்றுடன் ஒவ்வொரு வியாழக்கிழமையும் இடம்பெறும் வழிபாடானது மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் துவாரகமயி வழிபாடு, சாவடி ஊர்வலம், மாருதி வழிபாடு, துளசி வழிபாடு, ஜெகத்தரு வழிபாடு, நவசாயி வழிபாடு, விநாயகர் வழிபாடு, முருகன் வழிபாடு, நாகசாயி வழிபாடு, ருணவிமோக்'ன வழிபாடு, வைரவர் வழிபாடு, ஸ்ரீ ஆனந்த கல்யாண சாயிநாதர் வழிபாடு என தினமும் பல வகையான வழிபாடுகள் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

இவ் ஆலயத்தில் இடம் பெறும் பூசை முறைகள் ஏனைய ஆலயங்களில் இடம் பெறும் ''சை முறைகளில் இருந்தும் சற்று வித்தியாசமானது. குறிப்பாக பக்தர்கள் அனுமானை வழிபடுவதைப் போல் ஒற்றைக் காலில் இருந்து வழிபடுவதாகவும், கிறிஸ்தவ வழிபாடுகளில் காணப்படுவதைப் போல முழந்தாளில் இருந்து வழிபடுவதைப் போலும், விஸ்ணு வழிபாடுகளில் காணப்படுவதைப் போன்று ''சையின் இறுதியில் ஜாடாரி மூலமாக ஆசீர்வாதம் பெறப்படுவதுமான முறைகளும் காணப்படுகின்றது.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய பண்டிகை நாட்களிலும் இங்கு விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன. மேலும் வருடாந்த மகோற்சவமும் கடற்கரை தீர்த்தமும், ஆண்டுக்கொருமுறை சீரடி யாத்திரைகளும் இங்கு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. மக்கள் தங்களுடைய இடரான காலங்களில் இங்கு வந்து வழிபாட்டு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் வகையிலான வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

### 3.5. யாழ்ப்பாண சீரடி சாயி பாபா ஆலயம் வழிபடும் பக்தர்கள்

யாழ்ப்பாண சமூகத்தின் அனைத்துவிதமான தரப்பினரும் இவ்வாலயத்தின் பக்தர்களாக உள்ளனர். அதாவது சாதாரண தர மக்கள் முதல் படித்த அரச மற்றும் தனியார் துறைகளில் உயர்பதவி வகிப்போர் வரையாக உள்ளனர். இவ்வாறாகவே குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்து வயது தரப்பினரும் பால்நிலையினரும் இங்கு வருகின்றனர். ஆலய வழிபாட்டில் மற்றும் ''சைகளில்

ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஆலயத்தினை சுத்தம் செய்தல், கழுவுதல், ''சைக்குரிய பொருட்களை வழங்குதல், ''சகருக்கு உதவிபுரிதல், மகோற்சவ காலங்களில் உதவுதல், சுவாமி தூக்குதல், தீவர்த்தி பிடித்தல் போன்ற பல செயற்பாடு ஈடுபடுகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது. மற்றும் பக்தர் தாங்களே வீட்டில் தயார் செய்யப்பட்ட பிரசாதங்களை (உணவுகளை) மற்றும் கடைகளில் வாங்கிகொண்டுவரும் பொருட்களை (பிஸ்கட், சோடா) சாயிபாபவிற்கு படைத்து தாங்களே நீர் ஊற்றீ, தீபாராதனை செய்து வழிபடுகின்றனர். மேலும் வழிபாட்டின் போது பெரிய குரலில் அனைவரும் ஒன்றிணைந்து பாடல்கள் பாடுதல், அவருடைய வேறுபட்ட நாம அர்ச்சனைகளை உச்சரித்தல், வாசங்களை படித்தல் என மக்கள் பங்கேற்பு வழிபாட்டுமுறைகள் காணப்படுகின்றன. ஆடைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் இல்லாத போதும் ''சகர் வேட்டியுடனயே காணப்படுகின்றர்.

மேற்படி விடயங்களை மிக ஆழமாக நோக்கும் போது யாழ்ப்பாணத்து மரபார்ந்த இந்து சமயப் பண்பாட்டு மரபில் தனித்துவமான சமய வழிபாட்டு மரபுகளுடன் எழுச்சியடையம் ஒரு வழிபாட்டு மரபாகவே சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபானது உருவாக்கம் பெற்று வருகின்றமையினை அறியமுடிகின்றது.

## 4. தொகுப்புரை

சமயம் என்பது புனிதம் மற்றும் புனிதமின்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒன்றாக எமில் டுர்க்கை (1961) அவர்கள் குறிப்பிடுகின்றார். இந்நிலையில் இந்து சமய பண்பாட்டு மரபில் சமயத்தின் புனிதத் தன்மை தொடர்பான வரையறைகள் சீரடி சாயிபாபா வழிபாட்டு மரபில் மிகவும் நெகிழ்ச்சி தன்மையுடன் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனாலும் இந்துசமய வழிபாட்டு முறைகளை மிகவும் ஒத்திசைவு பெற்று நிலவும் வழிபாட்டு மரபாக காணப்படும் சீரடிசாயிபாபா யாழ்ப்பாணத்தில் இளையோரிடத்தில் சமய நம்பிக்கை மற்றும் வழிபாட்டு முறைகளில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றமையினை இங்கு குறிப்பிடத்தக்கது.

### உசாத்துணைப்பட்டியல்

Durkheim, E. (1961). *The Elementary Forms of Religious Life*. New York: Collier Books

Loar, Jonathan. (2018). From Neither/Nor to Both/And: Reconfiguring the Life and Legacy of Shirdi Sai Baba in Hagiography. *International Journal of Hindu Studies 22: 475-496.*

McLain, Karline. (2011). Be United, Be Virtuous Composite Culture and the Growth of Shirdi Sai Baba Devotion. *Nova Religio: The Journal of Alternative and Emergent Religions*: 20-40.

Pandya, Samta P. 2014. Syncretism and Pilgrimage in India: Nuances of Devotion to Saibaba of Shirdi. *South Asia Research* 34 (1).

Vicziany, Marika. (2016). The survival of the syncretic cults of Shirdi Sai Baba and Haji Ali despite Hindu nationalism in Mumbai. Deepra Dandekar & Torsten Tschacher (eds.*). Islam, Sufism and Everyday Politics of Belonging in South Asia* pp 156-173. UK; Routledge

White, Charles S. J. (1972) “The Sai Baba Movement: Approaches to the Study of Indian Saints,” Journal of Asian Studies 31, no. 4 (1972): 868